அட்டாளைச்சேனை பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,434,888 குறைத்து நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	நிதியாண்டுக்கான முத்திரை தீர்வையினை குறித்த நிதியாண்டு காலப்பகுதிக்குள் துல்லியமாக மதிப்பிடுவதில் பல சவால்களை எதிர் நோக்குகின்றோம்	கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 18 காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் 21 மோட்டார் வாகனங்கள் மற்றும் இழுவை பெட்டிகள மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதிகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இவற்றினை மீள்மதிப்பீடு செய்து உண்மையான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டுவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது	கணக்குகளை சீர் செய்ய துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) உப பிரிவு.	சபையினால் பேணப்படும் வீதிகளினதும் பாதைகளினதும் வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் அவற்றின் அறிவித்தல்களை வெளியிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன.	சட்ட விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள்			
(i) இலக்கம் 5(xii) விதி	காசு மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுவோர், வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர் மற்றும் களஞ்சிய பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள நான்கு உத்தியோகத்தர்களிடமி ருந்து போதுமான பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பில் சிலரிடம் பிணைப்பணம் அறவீடு செய்யப்பட்டு வைப்பிடப்பட்டுள்ளது என்பதுடன் ஏனையவர்களுடனிருந் தும் அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது.	நிதி நிருவாக விதிகளின் பிரகாரம், உரியவர்களிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) இலக்கம் 81 விதி	ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது உரிய காலப்பகுதிகளில் முத்திரைத் தீர்வை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி 2006			
(i) பிரிவு 2.11 (அ)	பெறுகைக் கால அட்டவணை, பெறுகை முறை மற்றும் விலைக் கேள்வி ஆவணத்தின் வகை என்பன பற்றி	கூட்டாக ஒருமித்து கூட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது	வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		உடன்படுவதற்கு பெறுகை குழுவுடனும் மற்றும் தொழில்நுட்பக் மதிப்பீட்டுக் குழுவுடனும் கூட்டாக ஒரு முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	
(ii)	பிரிவு 5.4.12	ரூபா 7,211,918 பெறுமதியான பெறுமதிசேர் வரியை மேவுவதற்கான கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் அத்தகைய கொடுப்பனவு பற்றிய விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்க வேண்டியிருந்தும், மீளாய்வாண்டில் 04 வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவு பற்றிய தகவல்கள் மேற்குறிப்பிட்டவாறு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர் வரும் மேற்படி காலங்களில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 19,682,690 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,776,717 தொகையாக ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i) வீதவரியும் வரியும்	250,000	198,170	198,170	-	350,000	167,235	167,235	-
(ii) வாடகை	8,000,000	6,826,740	4,023,690	2,803,050	13,975,000	11,625,839	8,901,169	2,724,670
(iii) உத்தரவுப்பத்திரக் கட்டணம்	1,427,000	1,155,375	1,056,375	99,000	1,372,000	1,133,450	1,010,450	123,000
(iv) ஏனைய வருமானம்	21,815,000	21,179,726	20,162,820	1,016,905	20,805,000	20,431,478	19,469,592	961,885
கூட்டுத் தொகை	**31,492,000**	**29,360,011**	**25,441,055**	**3,918,956**	**36,502,000**	**33,358,002**	**29,548,446**	**3,809,555**

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிருந்து பெறவேண்டிய ரூபா 273,300 , 10 வருடங்களிற்கு மேற்பட்ட நிலுவையாக உள்ளது. இத்தொகையினை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த நபர்களை அடையாளம் காண முடியாத உள்ளதால் அதனை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது	அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு அல்லது உரிய அனுமதி பெற்று பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகார பிரதேசத்தில் 101 கடைகளுக்கான வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனுமதிப்பத்திரம் வழங்க அவசியமான ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளினால் வழங்கப்படவில்லை என்பதுடன் குறித்த குறைபாடுகள் இவ்வருடம் நிவர்த்திக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	குறைபாடுகளை நிவர்த்தி செய்து அனுமதிப்பத்திரம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	சபையில் 2020 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 1,583,264 காட்டப்பட்டு வருவதுடன், அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முத்திரைக்கட்டணங்கள் கோரிப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	முத்திரை தீர்வையை வசூலிக்க உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
சபையின் சேதனப்பசளை உற்பத்தி நிலையம், கவசிமா இயந்திரம் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய இயந்திரங்கள் 2022 நவம்பர் 25 அந் திகதியிலிருந்து மாதாந்தம் ரூபா 667,500 வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த வகையில் Jeewashakthy Organic Fertilizer எனும் தனியார் நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,340,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கையிருப்பிலுள்ள சுமார் 6000 பொதிகள் பயளைகள் விற்பனை செய்வதன் மூலம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக குறித்த நிறுவனத்திற்கு எதிராக தற்போது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது	அறவீடுகளை அறவிட உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின், பொறித்தொகுதிகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 310,241,817 கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை காணி கட்டட பதிவேடு மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணனி மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ள துடன், நிலையான சொத்துப் பதிவேடுகளை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	நிலையான சொத்துக்களின் பதிவுகளை பதிவு செய்ய உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	நன்கொடைப்பதிவேடு பராமரிக்கப்படாததன் காரணமாக சபைக்கு இதுவரை காலமும் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்கள் தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.	இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்ட போதும் தற்போது தனியான நன்கொடைப் பதிவேட்டில் முறையாக பதிவதற்கான ஏற்பாடுகள் மேற்காள்ளப்பட்டுள்ளது	நன்கொடைப் பதிவேட்டடை உடனடியாக பேண வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான 14 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்தும், அவற்றில் திருத்தம் செய்யக்கூடியவற்றை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கும், திருத்த முடியாதவற்றை ஏலத்தில் விற்பனை	முன்னுரிமை அடிப்படையில் கட்டம் கட்டமாக வாகனங்களை திருத்தப்படுவது டன் பாவனைக்கு உதவாத	திருத்தம் செய்து மீளப் பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏலத்தில் விற்பனை

	செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் நன்கொடையாளர்கள் பெயரில் காணப்படுவதனால் ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பாக தாமதம் ஏற்பட்டுள்ளது.	செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதி வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 162 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், மற்றும் தார் வீதிகளினை மீள்சீரமைப்பதற்காக ரூபா 334,000 வைப்பாக அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் பயனாளிகளினால் மீள்சீரமைக்கப்பட்டு வைப்புத் தொகையினை மீளளிக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பூரணமாக திருத்த வேலைகள் முடிவடைந்த வீதிகளுக்கான வைப்புப்பணத்தை குறித்த பயனாளிகளுக்கு மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளை திரும்பப் பெறப்படாத வைப்புப் பணங்கள் உரிய முறைப்படி வருமானத்திற்கு மாற்றப்படும்	ஐவப்புத் தொகை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(உ)	அஸ்ரப் நகரில் திண்மக்கழிவுகள் கொட்டும் இடம் அமைந்துள்ள காணியினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏலவே நடவடிக்கை மேற்கொண்டு ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளது	திண்மக் கழிவுகள் கொட்டும் இடம் அமைந்துள்ள காணியினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வேறு அமைப்புகளிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் சபையினால் அனுமதி பெறப்பட்டு குறித்த வாகனங்களை சபையினுடைய பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்காமல், பிரதேச சபையினால் வழங்கல்களும் சாதனங்களும் மற்றும் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தலும் பேணலும் ஆகியவற்றிற்காக ரூபா 24,374,508 செலவிடப்பட்டிருந்தது.	பெறுகைத்திட்டம் காணப்பட்ட போதும் உரியவாறு இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	உரிய முறையில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	வீதி மற்றும் வடிகான் அமைக்கும் போது சரியான மற்றும் நீர் வழிந்தோடக்கூடிய வகையில் முறையான திட்டமிட்டு மேற்கொள்ளப்படாததன் காரணமாக 2023ம் ஆண்டில் புறத்தோட்டத்தில் அமைக்கப்பட்ட வீதியில் மழை காலங்களில் வீதியின் மேல் தேங்கி நிற்கும் நீரினால் வாகன ஓட்டுனர்களுக்கும் பொது மக்களுக்கும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், குறித்த வேலைக்கான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	இவற்றினை சீர் செய்வதற்கு எம்மால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	நூலகத்தின் பல்வேறு செயற்பாட்டு பிரிவுகளான பத்திரிகை வாசிப்பு பகுதி, இரவல் பகுதி, சிறுவர் பகுதி, இலத்திரனியல் நூலக பகுதி, உசாத்துனைப் பகுதி மற்றும் களஞ்சியப் பகுதி போன்றவற்றை ஏற்படுத்துவதற்கு தேவையான போதிய இடவசதி இன்றி நூலக கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் எமது சபை நிதியின் மூலம் மேல் தளத்தினை நிர்மாணித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும	தோடர்புடைய சேவைகளை வழங்க போதுமான இட வசதியுடன் கூடிய நூலக கட்டிடம் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	நிதி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க சுற்றிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம், மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் வீதிகளை அமைக்கும் போது கிறவல் போடுதல் மற்றும் தற்காலிக பாதை அமைத்தல் போன்றவற்றை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் பூசுதல் அல்லது கொங்கிரீட் இடுதலை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டில் சபையின் நிதியினை பயன்படுத்தி ரூபா 2,525,523 ஒப்பந்தத்தின் கீழ் 05 வீதிகளுக்கு கிறவலிடலானது இச்சுற்றறிக்கைக்கு முரணானவகையில் இடம்பெற்றிருந்தது.	கௌரவ ஆளுனர் அவர்களினால் இவ் வீதிகளை செப்பனிட்டு வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதனால் அவற்றினை கிறவல் இட்டு செப்பனிடப்பட்டுள்ளது.	சுற்றிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகார சபைகள் வீதிகளை அமைக்கும் போது கிறவல் போடுதல் மற்றும் தற்காலிக பாதை அமைத்தல் போன்றவற்றை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக் கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் பூசுதல் அல்லது கொங்கிரீட் இடுதலை மேற்கொள்ள வேண்டும்

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையினால் திராய்க்கேணி பிரதேசத்தில் முன்பள்ளி பாடசாலையொன்று ரூபா 13,431,545 இல் நிர்மாணிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் முன்பள்ளி ஆசிரியருக்கான வெற்றிடம் காணப்பட்டிருக்காததுடன், அப் பதவிக்கான ஆளணியினரை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கூடாக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஆளணியினை நிரப்ப உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

(ஆ)	சபையில் ஊழியர் கடன் பெற்று இறந்த ஊழியரிமிருந்து ரூபா 91,672 அறவிட வேண்டியதாக காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 5,092 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.	ஊழியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து கழித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	நிலுவை கடன்களை அறவிட உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையினால், உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 04 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது	சபையின் செயற்பாட்டு நடவடிக்கை களை மேம்படுத்த மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்கு பரிந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
பாதீடானது கடந்த காலங்களில் அறவிடப்பட்ட வருமானங்கள் மற்றும் வருமான வழிமுறைகள் சரியாக இனங்காணாமையினால், 0 தொடக்கம் 50 சதவீதம் வரையான வீச்சினுள் 11 வகையான பாதிடப்பட்ட வருமானங்கள் அறவிடப்படாது காணப்பட்டிருந்தன.	தற்போது வருமான அறவீட்டு முகாமைத்துவத்தினை மேலும் வினைத்திறனாக மாற்றி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 100% அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	கடந்த காலங்களில் அறவிடப்பட்ட உண்மை வருமானங்கள் மற்றும் வருமான தரவுகளின் அடிப்படையில் வருமான மதிப்பீட்டினை கணிப்பிட்டு பாதீட்டினை தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்கங்களுக்கிணங்க சுற்றாடல் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படாத 53 தொழில் நிறுவனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை காணப்பட்டிருந்தது.	மேலும் முறைமைப்படுத்தி மற்றும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	உரிய சட்டங்களின் பிரகாரம், தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் திண்மக்கழிவு சேகரிப்பு மத்திய நிலைய இடம், விலங்கறுமனை மற்றும் கவசிமா இயந்திரம் என்பனவற்றிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவை தொடர்பில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது	சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதியாண்டுக்கான பாதீடு தயாரிக்கும் போது தரவுகளை சேகரித்து பாதீடு தயாரிக்கப்படும்.	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் படி நிலைபெறா அபிவிருத்தி இலக்குகளை அடைய நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

4.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கும் கழிவுகள் மற்றும் ஏனைய சபைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கழிவுகளை உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகள் என தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அனைத்து கழிவுகளும் ஒரே இடத்தில் கொட்டப்படுகின்றது.	எமது சபையினால் சேதனைப்பயளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், எமது சபைக்குச் சொந்தமான திண்மக்கழிவு நிலநிரப்புத் தளத்தில் திண்மக் கழிவுகளைக் கொட்டும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் திண்மக் கழிவுகளை தரம்பிரித்து அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கழிவுகளை முகாமைத்துவம் செய்து உக்ககூடிய கழிவுகளை சேதனப்பசளை உற்பத்திக்கு அல்லது மாற்று பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.